


**26. 05. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. குவாட் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் அவசியத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

2. அம்பாசமுத்திரம் அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர் தமது பதவி விலகல் கடிதத்தை பேரவை தலைவர் திரு. J C D பிரபாகரிடம் இன்று சமர்ப்பித்துள்ளார்.

3. காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 51ஆவது கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

4. வேதாரண்யம் அருகே படகு கவிழ்ந்ததால் கடலில் தத்தளித்த 3 மீனவர்கள் மீட்கப்பட்டனர். ஒருவரை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

5. ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியின் பிளே ஆஃப் சுற்றுகள் இன்று தொடங்குகின்றன.

## இனி விரிவான செய்திகள்

************

குவாட்

குவாட் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் அவசியத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற குவாட் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்திற்கு பின்னர் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அமைச்சர், படைப்பாற்றல் திறன், புதுமையான கண்டுபிடிப்புகளை முன்னெடுத்துச்செல்லும் குவாட் நாடுகள் வள மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

ஜனநாயக நாடுகளாக திகழும் குவாட் நாடுகள், தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்கு உயர் கவனம் செலுத்தி வருவதாகவும் எடுத்துரைத்தார்.

குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் உலகளாவிய பரஸ்பர நலன் சார்ந்த விசயங்கள் குறித்த கருத்துக்கள் பரிமாறப்பட்டதாகவும்,

இந்தோ பசிபிக் பிராந்தியத்தின் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் விரிவாக்கம், கண்காணிப்பு, விழிப்புணர்வு, தளவாட இணைப்புகள், கடல் வழிதடம், திறன்மேம்பாடு, மனிதநேய உதவிகள், பேரிடர் மீட்பு நடவடிக்கைகள் உட்பட கடல்சார் மேம்பாட்டு பணிகள் சீராக விரிவடைந்து வருவதாக குறிப்பிட்டார்.

குவாட் நாடுகள் வரும் காலங்களில் இவை அனைத்தையும், தொடர்ந்து வலுப்படுத்தும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னதாக டாக்டர் ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்ற குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் **Marco Rubio**, ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் **Penny Wong**, ஜப்பான் வெளியுறவு அமைச்சர் **Toshimitsu Motegi** ஆகியோர் பங்கேற்றனர்.

************

முதலமைச்சர்

பிரதமர் திரு.நரேந்திர மோடியை சந்தித்து பேசுவதற்காக தமிழக முதலமைச்சர் திரு.விஜய் நாளை புதுதில்லி செல்ல இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில் பல்வேறு திட்டம் சார்ந்த கோரிக்கைகள் குறித்து பிரதமரிடம் எடுத்துரைத்து நிதி உதவியை கோர இருப்பதாக தெரிகிறது.

காங்கிரஸ் தலைவர்களையும் முதலமைச்சர் சந்தித்து பேச இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

************

அஇஅதிமுக

மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளின் அஇஅதிமுக உறுப்பினர்கள் நேற்று தங்களது பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து அம்பாசமுத்திரம் தொகுதி அஇஅதிமுக உறுப்பினர் திரு.இசக்கி சுப்பையா, தமது உறுப்பினர் பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார்.

தமது ராஜினாமா கடிதத்தை சட்டப்பேரவை தலைவர் திரு. J.C.D பிரபாகரிடம் இன்று அவர் சமர்பித்துள்ளார்.

இதனிடையே மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகள் காலியிடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்களின் ராஜினாமாவை அவை தலைவர் ஏற்றுக்கொண்ட முடிவை அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி குறை கூறியுள்ளார்.

எடப்பாடி பழனிச்சாமி தரப்பிலான அஇஅதிமுக கொறடா திரு.அக்ரி எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவை தலைவரை சந்தித்து கட்சி தாவல் தடை சட்டத்தின் கீழ் உறுப்பினர்களின் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கோரி மனுவை அவரிடம் சமர்ப்பித்துள்ளார்.

************

PMWANI

நம் நாட்டின் டிஜிட்டல் பொது கட்டமைப்பை வலுப்படுத்தி அனைவருக்கும் இலகுவான இணையதள சேவையை உறுதி செய்ய PMWANI பிரதமரின் wi fi வலைதள கட்டமைப்பின் கீழ் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

தற்போதைய டிஜிட்டல் மய சூழலில், இந்த பொது கட்டமைப்பு, இளைஞர்கள், பயணிகள், தொழில் நிபுணர்கள், சிறு வர்த்தகர்கள் உள்ளிட்டோருக்கு இன்றியமையா பயனளிக்கும் என்று தொலைதொடர்பு துறை இணை அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நிலையிலான பொது wi fi மற்றும் QR Code-ஐ பயன்படுத்தி இணையதள சேவையை அனைத்து பயனாளிகளும் எளிதாக பெற இது வழிகோலுகிறது என்றார்.

நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் டிஜிட்டல் தொடர்பை பயன்படுத்த வேண்டும் என்ற பிரதமரின் தொலைநோக்கு திட்ட செயலாக்கத்தின் நடவடிக்கையாக இந்த சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

************

செமி கண் டெக்டர்

நாட்டின் செமி கண்டெக்டர் துறையை வலுப்படுத்தி மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு முழுவீச்சில் மேற்கொண்டுள்ளது.

செமிகாண் இந்தியா திட்டத்தின் கீழ் 12 கட்டமைப்பு திட்டங்களுக்கும் 24 செமிகண்டக்டர் திட்டங்களுக்கும் அங்கீகாரம் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தும் வகையில் முதலீட்டாளர்கள் ஆதரவு என்ற இணையதள சேவையையும் செமி கண்டெக்டர் இயக்கம் தொடங்கியுள்ளது.

அரசின் திட்டங்கள், கொள்கைகள், அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள திட்டங்கள், முதலீட்டாளர்களுக்கான தேவைகள், போன்றவை குறித்த பல்வேறு தகவல்களை இந்த இணையதளத்தில் பெற முடியும்.

இந்த இணையதளத்தை தொடர்பு கொள்ள இந்திய செமி கண்டெக்டர் Mission வலைதளத்தை பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

************

ஒப்பந்தம்

இந்தியா அமெரிக்கா இடையே அரிய வகை கனிமங்களை பதப்படுத்துதல், பாதுகாப்பான விநியோகம், சுரங்க நடவடிக்கைகளில் இருதரப்பு கட்டமைப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தால் விநியோக சங்கிலிகள் வலுவடைந்து பரவலாக்கப்படுவதோடு ஒருங்கிணைந்த நிதி திட்டங்களை மேற்கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.

அரியவகை கனிமங்களின் மேலாண்மையை ஆக்கப்பூர்வமாக முன்னெடுத்துச்செல்லவும் இந்த ஒப்பந்தம் வழிகோலுகிறது.

************

காவிரி நீர் மேலாண்மை

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 51ஆவது கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

ஆணைய தலைவர் திரு.எஸ்.கே. ஹல்தர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் கர்நாடகம் தமிழகத்திற்கு தர வேண்டிய நீரின் அளவு குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

************

குருபெயர்ச்சி

திருவாரூர் மாவட்டம் ஆலங்குடி அருள்மிகு ஆபத் சகாயேஸ்வரர் திருக்கோவிலில் குரு பெயர்ச்சி விழா இன்று விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

தஞ்சை மாவட்டம் திட்டை அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோவில்

மயிலாடுதுறை வதான்யேஸ்வரர் ஆலயத்திலும் குருபெயர்ச்சி அபிஷேக ஆராதனைகள் இன்று சிறப்பாக நடைபெற்றது.

************

ஆட்டு சந்தை

நெல்லை மேலபாளையம் ஆட்டு சந்தையில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு செம்மறி கிடாய் ஒன்று 55 ஆயிரம் ரூபாய் வரை இன்று விற்பனையானது.

நெல்லை தூத்துக்குடி தென்காசி விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து பொட்டுக்குட்டி, மகிழம்பாடி, கருப்பு கிடா, பல்லையாடு உள்ளிட்ட ஆடுவகைகள் அதிக அளவில் விற்பனைக்கு வந்துள்ள நிலையில் 4 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

பொள்ளாச்சி மாட்டு சந்தையிலும் பக்ரீத் பண்டிகையை ஒட்டி நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனை ஆகி 5 கோடி ரூபாய்க்கும் அதிகமான வர்த்தகம் நடைபெற்றதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

************

சிவகங்கை

சிவகங்கை மாவட்டத்தில் பிரதமரின் வேளாண் நிறைவுரல் முகாம்கள் அனைத்து கிராமங்களிலும் வரும் 15ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி கூறியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

************

மீனவர்கள்

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே கடல் சீற்றம் காரணமாக படகு கவிழ்ந்து கடல் நீரில் விழுந்த 4 மீனவர்களில் 3 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட மீனவர்கள் வேதாரண்யம் அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவரை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

## கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியின் பிளே ஆஃப் சுற்றுகள் இன்று தொடங்குகின்றன.

தரம்சாலாவில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் முதல் குவாலிஃபயர் ஆட்டத்தில் நடப்பு சேம்பியன் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு – குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதி போட்டிக்கு தகுதிபெறும்.

நாளை நியூசண்டிகரில் நடைபெறும் எலிமினேட்டர் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் – ராஜஸ்தான் ராயல்ஸ் உடன் மோதுகிறது.

************

## சிங்கப்பூர் ஓப்பன்

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் Ayush Shetty - கனடாவின் Victor Lai-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது